ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

अङ्गं गलितं पलितं मुण्डं दशनविहीनं जातं तुण्डम् ।
वृद्धोयाति गृहीत्वा दण्डं तदपि न मुंचत्याशापिण्डम् ॥

अङ्गं - சரீரமானது,
गलितं - தளர்ச்சியடைந்துவிட்டது
मुण्डं - சிரஸ்ஸானது
पलितं - கேசங்கள் உதிர்ந்து வழுக்கையாயிருக்கின்றது
तुण्डं - முகமானது
दशनविहीनं - பல்லில்லாததாக
जातं - ஆய்விட்டது.

वृद्धः - அதிக வயதுசென்றவவனுய்க்கொண்டு
दण्डं - தடியை
गृहीत्वा - பிடித்துக்கொண்டு
याति - போகிருன்
तदपि - அவ்வித அவஸ்தைகளை அடைந்திருந்தபோதிலும்
आशापिण्डं - ஆசையின்கூட்டமானது
नमुञ्चति-இவனைவிடுகிறதில்லை.

எவ்வளவு அறிவாளியாயிருப்பினும் யௌவநப்பருவத்தில் விஷயங்களில் இழுக்கப்பட்டு அவைகளில் ஆசை கொண்டு ஒரு ஸமயம் பிரமிக்கும்படி நேரலாம். யௌவநகாலம் தாண்டி அதற்கு மேலான கிழவனுயிருக்கும் தன்மையைப்பெற்று சரீரம் தளர்ந்து தலையிலும் வழுக்கை விழுந்து வாயிலுள்ள பற்களும் பூராவாக விழுந்து அதிக வயது சென்றபடியால் நடக்கச் சக்தியற்று தடியை ஊனிக்கொண்டு செல்லும் அவஸ்தையை யடைந்த பிறகும் நச்வரமான விஷயபோகங்களில் இருக்கும் பற்றுதலை அறவே யொழித்து வைராக்கியம் பெற்று பரலோகத்திற்கு வேண்டிய ஸாதனங்களைத்தேட முயலாமல் அக்காலத்திலும்முன்னைக்காட்டிலும் அதிக ஆசை மேலிட்டு விஷயங்களில் முழுகி ஜன்மாவைக் கெடுத்துக்கொண்டு நரகத்திற்கும் இறையாகிருர்கள். இவ்விதமிருப்பது மானிடப்பிறவிக் குற்ற தர்மமல்லவென்று அறிவிக்கப்படுகிறது.

உபபத்திராதிபர்.

424

# ஆர்ய தர்மம்.

க்ஷய-௵ ஆவணி௴-மீ ௩௮-உ

## வேதாந்த சித்தாந்தம்.

(332-ஆவது-பக்கத் தொடர்ச்சி.)

9. மேலும், சரீரமே ஆன்மாவென்று எண்ணியவர்களுக்கும் ஆன்மாபற்றற்றவனென்பதில் தடையில்லை. பிரமஞானிகளுக்குக்காது முதலிய பல இந்திரியங்களிற் சப்தம் முதலிய பல விஷயங்களற்ற பொழுது எல்லாவற்றிற்கும் சாட்சியாய் நின்ற அந்தக்கரணத்தில் சங்கற்பமுதலிய தொழில்களிருப்பினும் யாதும் குற்றமில்லை. அவித்தையும, அதிற்காரியமாய பரபஞ்சமும், அப்பிரபஞத்தின் காரியமாய மற்றெல்லாவாசனைகளையும் அவர் அவ்வத்துவித அறிவால் அகற்றினராதலால் என்றறிக உலகத்தில் முன்போன்ற உருவத்தை யற்றியிருப்பினும் வறுந்த துவரை முளைப்பதுண்டோ? "புருஷன் பற்றற்றவன்" 'தாமரையில் தண்ணீரைப் போல் அப்புருஷனே வாசனை பற்றுமலிருக்கும்" என்று பல சுருதிஸ்மிருதிகளிற் காணப்படுவதால் ஆன்மா முக்காலத்தும் பற்றற்றவனென்பது துணியப்பட்டது.

"பிரமஞானிகளுக்கு விதியில்லை, தள்ளத் தக்கதில்லை, கொள்ளத் தக்கதில்லை" என்று தொடங்கிய பல வேதங்களாற் பிரமஞானிகளுக்கு விதிவிலக்குகளில்லை என்பது நன்றாய் வெளியாகின்றது. சிலர், இது அர்த்தவாதமெனச் சொல்லுகின்றனர். மற்றும் சிலர் தத்தம் வருணாசிரமங்களுக்கேற்ப அநுசிதமென்றும் சொல்லுகின்றார்கள். உத்தம ஞானிகட்கே உரித்தென்றும் சிலரபிப்பிராயப் படுகின்றார்கள். இவைகள் பிரயோஜனமுள்ள பட்சங்களென எண்ணக் கூடாது. ஏனெனில் அர்த்தவாதமாகில் அஃது உமக்குள்ள பிரமஞானத்தின் பொருமையைக் காட்

டும். இரண்டாவது பட்சம் சமுசயபட்சமென்று சொல்லத்தக்க கருமஞான வாதமாய் முடியும். மூன்றாவது பட்சத்தின் பிரம ஞானத்துத் தாரதம்மியம் ஏற்படுதலால், அது நிலைபெறாதென்று ஒரு குற்றந்தோன்றும். யாம் காணும் எல்லா உலகமும் இப்பி யில் வெள்ளி தோற்றுவது போல் அசத்தென அறிந்து கர்மகா ண்டங்களுள் கூறப்பட்டுள்ள பற்பல கர்மவலைகளைவிட்டு விலகி நின்ற அப்பெரியோர்களுக்கு இவ்வித சாஸ்திரங்கள் எவ்விதம் கட்டை யுண்டாக்கும்? பற்றற்ற பரமான்மாவின் நிலைமையை அறிந்த பரமயோகியாகிய ஒருவன் இருக்கும் நிலைமை முக்குண ங்களையும் கடந்து விதி விலக்குகளற்று நிற்கும் இடமாதலால், அவனே பரமோத்தமனென்பது உண்மை நூல்களின் துணிபு.

10. உலகத்தில் எக்குலத்திற் பிறந்தவராயிருப்பினும் அனைவர்க்கும் இந்தப் பிரமஞானத்தில் அதிகாரமுண்டென்பதிற் சிறிதேனுந் தடையின்றாம். சூத்திரகாரர் உத்தரமீமாஞ்சா சூத் திரத்தில் சூத்திர வருணத்தவர்க்கு வேதாந்தத்திலதிகாரமில்லை யெனச் சொல்கின்றனரே யென்னில், அது வேதத்தால் அப்பொ ருளை விசாரிக்கக் கூடாதென்று அதற்குப் பொருள் கொள்ளல் வேண்டுமேயன்றி, மற்றைப்பாஷைகளிலெழுதிய அவ்விததத்து வங்களை எவ்வித ஈனசாதியிற் பிறந்தவரும் அறியாலமென்று அவ ரே எடுத்துரைத்திருக்கின்றார். சுத்த தத்துவத்தாற் பிறந்து ஜன்மாந்திரத்திற் செய்த ஏதோ ஒரு சிறு பாவத்தால் தாழ்ந்த குலத்திற் பிறந்த போதிலும், முற்பவத்திற் செய்த பல புண்ணி யங்களால் நித்யா நித்திய வஸ்து விவேக முதலிய பல சாதனங் களைப் பெற்று மோக்ஷத்தை யடைந்தவர்களுக்கு அதிகாரமில்லை யெனச் சொல்லல் அமையாததலின் எல்லோரும மோக்ஷாதிகா ரிகளே.

11. மேலும், அத்வைதிகளுடைய சித்தாந்தத்தில் கர்மா னுஷ்டானங்களும், அநேக அங்கங்களுடன் கூடிய பக்தியும், எட்டு அங்கங்களுடன் கூடிய ராஜயோகம், அடயோகம், மந்திர யோகம், லயயோகம், லம்பிகாயோகம், முதலிய பல வேற்றுமை

கள் பெற்ற யோகங்களும், வேதாந்தங்களிற் பலவிடங்களிலே பல விதமாகச் சொல்லப்பட்ட உபாசானைகளும் ஒப்பத்தக்கனவே. முன்பு அவைகள் மறுக்கப்பட்டிருக்க அவைகளை எவ்விதமொப்புக் கொள்வதெனில்; அந்தர்முக நிலைமையென்றும், பெகிர் முகநிலைமையென்றும் யோகிகள் கூறுவதுபோல், பாரமார்த்திகமென்றும் வியாவகாரிகமென்னும் இரண்டு தசைகள் இச்சாந்திகளோப்பவேண்டிய ஆவச்யகமாதலால், அவ்விருவகைத் தசைகளுள் வியாவகாரிக மென்னுந் தசையில் முன்கூறிய கர்மம், யோகம், உபாசனை இவைகள் பயன்படுமென்பது துணிபு. அதுபற்றியே சூத்திரகாரர் கிரமமாய் உத்தமலோகங்களையடைந்து முடிவில்பிரமலோக வழியாய்ப் பேராநந்த மெய்தும் வழியை எடுத்துக்காட்டுமிடத்தில் வருணாசிரம தருமம், உபாசனையாதியவை பயன் படுமெனச் சொல்லுகின்றார். ஆதலால் துவிதம், விசிஷ்டாத்வைதம், இவ்விருவகைச் சித்தாந்தங்களைக் கொண்டு அத்தசையில் உபயோகமுள்ளவர்களாவார்கள். இக்கருமம், பக்தியாயவைகள் பிரமஞானத்தாற் பெறப்படும் முத்தியைத் தடுக்க வலிமையற்றனவாம. வேதங்களில் "இங்கே பிரமத்தை யுடைகின்றான்" என்று கூறப்பட்டிருத்தலால் ஒரு சித்தாந்தத்திலும் அகப்படாமலும் சர்வசித்தாந்த சம்மதமாயும் நின்ற இவ்வத்வைத சித்தாந்த மொன்றிற்றான் கைவல்யமுத்தி சித்திக்குமென்று சமஸ்தவாதங்களுக்குமிச் சித்தாந்தத்திலிடமுண்டு.

(தொடரும்)

உபபத்திராதிபர்.

---

# மாவலி.

(முன் 380-வது பக்கத் தொடர்ச்சி.)

இறந்தவரானாலும் கேட்பவர்களுக்கு 'இல்லை' என்னாது கொடுத்தவர் எந்நாளும் இருப்பரேயன்றோ? இந்த உண்மை உமக்குத் தெரியாததோ? கொடுக்கக் கூடியதொன்றைக் கொடுக்கமாட்டேன் என்பது உலோபிகளது செய்கையல்லவா? பொ

ருமை காரணமாகவோ அறியாமை காரணமாகவோ ஒருவருக்குப்பிறிதொருவர் கொடுப்பதை இடையில் நின்று 'கொடாதே' என்று தடுப்பது பெரிதும் பாதகச் செயலாயிற்றே. அஃது அங்ஙனம் தடுத்தவரையும், அவரதுசுற்றத்தாரையும் உண்ணஉணவும், உடுக்கஉடையும் இன்றிப் பிச்சை எடுத்துப் பிழைக்குமாறுசெய்துவிடுமே. இங்ஙனமிருந்தும் தேவரீர் என்னை இடையில்நின்று தடுக்குகின்றீர்.

இது முறையன்று. எனது உயிரே போவதாயினும் நான் இவ்விஷயத்திலே பின்வாங்கப் போவதில்லை. நான் முன்னர்ச் சொல்லியதினின்றும் பின்னர்த்தவறமாட்டேன். இனிஇத்தகைய விஷயங்களில் இடையில் நின்று தடைசெய்யாதீர்" என்று பகர்ந்தான். அருகிலிருந்த அந்தணரை நோக்கினன். "ஆண்டவரே, தேவரீர் வேண்டியவாறே தங்களுக்குப் பிரியமானபடி மூன்றடி நிலத்தையும் அளந்து கொள்ளுங்கள்" என்றான். திருநெடுமாலாகிய அந்தணரும் தமது குறிய கையை நீட்டித் தான் நீரை ஏற்றனர்.

ஏற்றலும், அப்பொழுதே வாமனர் பெற்றோரும் இகழத்தக்க தமது குறளான உருவத்தை மாற்றலானார். அவரது உருவமும் குற்ற மற்ற வழியிலே தேடப்பட்ட பொருளால் தக்கவர்களுக்குச் செய்யப்பட்ட தானத்தின் பயன் போல வளர்ந்தது. அந்த வளர்ச்சியை எவராலும் அளந்தறிய முடியவில்லை. அக்கால், அவரது ஓர் அடியில் இந்த மண்ணுலகம் அடங்கிவிட்டது. விண்ணுலகம் இரண்டாவ அடிக்காயது. மூன்றாவது அடிக்கி இடமில்லை

கண்டனன் மாவலி. சிறிதும் மனம் கலங்கவில்லை. தனது தவப் பயன் பெற்றதென்றே கருதினான். வாமனரைப் பார்த்தான். திரிவிக்கிரமாக நிற்பதை உணர்ந்தான். பெருமகிழ்வுற்றான். "அந்தணீர் இனி தேவரீருக்குக் கொடுக்கக் கூடியதாக என்னிடத்திலே ஒன்றுமில்லை. அடியேனது முடியே உளது. தயைசெய்து அதனை அளந்தருள வேண்டும்" என்றனன். உடனே ஏக நாயகனாகிய எம்பெருமான் அந்தவள்ளலாகிய அன்பனது முடியிலே தமது செந்தாமரைபோன்ற திருவடியை வைத்தார்; பூமியுள் அழுத்தினார் என்றும் அழியாப்பதத்தையும், புக

ழையும் அளித்தார். தன்னிடம் வந்து கேட்டவர்களுக்கு 'இல்லை' என்று கூற உடன்படாது உயிரையும் கொடுத்த உத்தம வள்ளல்களில் மாவலியும் ஒருவன்.

தண்டமிழ்த்தொண்டன்.

---

## கோமாத்ருபுர வேதபாராயண விமர்சை.

திருவாமாத்தூர் என்றழைக்கப்படும் கோமாத்ருபுரம் தென்னார்காடுஜில்லா விழுப்புறத்திற்கு இரண்டுமையில் வடமேற்கிலுள்ளது. பண்டைய அரசர்களால் ரக்ஷிக்கப்பட்டு வந்த இந்த க்ஷேத்திரத்தின் மாஹாத்மியம் ஸ்காந்தத்தில் வெகுவாகப் போற்றப்பட்டிருக்கிறது. இதை குப்தகாசி என்றும் இங்குள்ள லிங்கம் வெகு அழகாயிருத்தலால் அபிராமேசர் என்றும் மோக்ஷத்தை யளிவக்கல்ல அம்பாள் முக்தாம்பாளெனவும்கூறப்பட்டுள்ளது. ஆதுநிக தர்ம கர்த்தர்கள் கையில் சிக்காது ப்ரத்யக்ஷமாகப் பல பலன்களை யளித்துவரும் இச்சிவாலயததிற்கு வைஷ்ணவரான ஸ்ரீமான் வரதராஜபிள்ளை தர்மகர்த்தனும். இப்பங்குனியில் பிரம மோத்ஸவம் நடைபெற்றது.

தைத்திரீய ஸம்ஹிதை ஏழாங்காண்டம் கடைசி ப்ரச்நத்தில் "பசுக்கள் கொம்பில்லாமலிருந்து கடவுளை ஓர் யாகத்தால் பூஜித்துக் கொம்பைப் பெற்றன" என்ற கதை இந்த க்ஷேத்திரத்தில் தான் நடந்தது. ஆதலால் இவ்வபிராமனுக்கு அறுபது வருஷமாக உத்ஸவத்தில் வேதபாராயணம் நடந்து வருவது வியக்கத் தக்கதல்ல. சுமார் முப்பதாண்டாக மகா-௱-௱-ஸ்ரீ சுந்திரய்யர் என்ற பெரியார் யாசகம் செய்து இதை நடத்திவந்தார். இந்த க்ஷேத்திரத்தின் மாஹாத்மியத்தைக் கண்டறிந்த பெரியார் அக்நிஷ்டோமம் கருடசயநம் முதலிய பலக்ரதுக்களைச் செய்த மஹான் காசிக்குக் கால் நடையாயும் ரயில்வழியாகவும் பலமுறை சென்ற பண்டிதர் எழுபத்தைந்தாவது வயதிலும் அக்நிஹோத்ரமநுஷ்டிக்கும் அந்தணோத்தமர் வேதகாவ்யமிரண்டிலும் கரை

கண்ட கவிவரர் பிருமமஸ்ரீ யாகதீக்ஷிதர் என்ற மஹாநுபாவர் இவ் வேதபாராயண கைங்கரியத்தைப் பத்துப்பதினைந்து வருஷமாகக் கைக்கொண்டு நடத்த ஆரம்பித்தார். வந்தியைக்கு வயிற்றுநோவு தெரியாதென்றபடி வேதத்தை நன்குணர்ந்து அதனை அநுஷ்டித்த புண்ணியரே. வேதப் பெருமையை யறிவாரன்றோ? இப்புண்ணியாத்மா இத்தர்மத்தைச் சாச்வதமாக நடத்த மூவ்வாயிரம் ரூபாயும் ஓர் தர்மக்கட்டத்தையும் மூலதனமாக மூவ்வாயிரம் ரூபாயும் சேர்த்து நாலு பெரியாரைக் கமிட்டி அங்கத்தினராக ஏற்படுத்தினர். வைதிகத்தில் வந்தவருமானமும் முற்றிலும் பிராமணர்களே கொடுத்த நன் கொடையுமே இதில்சேர்ந்தது. "அன்ன-मयं हि सौम्यमनः" என்ற உபநிஷத்தின் உண்மையை உணர்ந்து ஸாதுக்களிடமே ஸஹாயத்தைப் பெற்று ஸாதுக்களுக்கே விநியோகம் செய்யும் இச்சாதுவை போற்றாத ஸாதுவில்லை.

'வேதமறிந்த விப்ரர்களை தினே தினே நமஸ்கரிக்கவேண்வேண்டும்.' என்ற ச்ருத்யர்த்தத்தை அநுபவத்தில் பார்க்க விரும்புவோர் பிருமதீக்ஷிதர்வாள் செய்யும் பிராமண பூஜையை நேரில் பார்த்தல் வேண்டும். அன்றியும் "सर्पिष्वदातिथ्यं क्रियते" என்ற (நெய் நிறைந்த அதிதி பூஜை செய்ய) படி நெய்யாறாக தயிர் சமுத்திரமாக ஓடுவதை இங்கு காணலாம். எக்காரணம்பற்றியோ எங்கும் க்ரம பாராயணமே செய்யப்படுகிறது. ஆனால் ஸ்மிருதிகளில் விசேஷமாக ஸம்ஹிதாபாராயணமே விதிக்கப்பட்டுள்ளது. அதையே தபஸ் என்று மௌத்கல்யர் கூறியபடி காலையிலெழுந்து நித்யகர்மாக்களை முடித்து ஆஹாரமில்லாமல் தானும் கூட இருந்து ஸம்ஹிதாபாராயணத்தைத் துவக்குகிறார். போஜனத்திற்குப் பிறகு சாகைகளும் ஸ்வாமி புறப்படும்போது மாத்ரம் க்ரமபாராயணமும் நடத்துவது சாஸ்திரஸம்மதமானதன்றோ? சென்றவாண்டு பாராயணக்காரர்களுக்கு தக்ஷிணையுடன் வஸ்திரதானம் செய்யப்பட்டது. இவ்வாண்டோ ஒவ்வொரு பவுன் ஸ்வர்ணதானமளிக்கப்பட்டது. பாராயணத்திற்கு வேதகாவ்யமிரண்டையும் வர்ணக்ரமம் ஜடை கநம் முதலியவைகளையுமுணர்ந்த

பிரும்மஸ்ரீ ஸாம்ப சிவசிரௌதிகள் வாக்குடை சுப்ராம கனபாடிகள் முதலிய வித்வத் சிரோமணிகள் வந்திருந்தனர். வேதசாஸ்திர விசாரமும் தர்மசாஸ்திர ஆராய்ச்சியும் ஜடைகநவர்ணக்ரம லக்ஷணங்களும் எல்லோரையும் திகைக்கும்படி செய்தன. இச்சபைக்கு பாரிஷதர்களோ ஒரு அக்ஷரங்கூடத் தவராது கனம் சொல்லும் சிதம்பரம் வக்கில் பிரும்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளும் கடலூர் டிரைனிங் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் பிரும்மஸ்ரீ வெங்கிட்டரமணி சாஸ்திரிகள் பி ஏ. எல். டி. போன்ற பெரியோர்களே. இதேபோல் புருஷபாகமற்ற போஜனமும் சிரத்தை நிறைந்த பிராமண பூஜையும் சாஸ்திரத்தையொட்டிய பாராயணமும் வேதசாஸ்திர நிபுணர்களின் ஸம்மானமும் ஆதரவு நிரைந்தபூஜை வைச்வதேவத்திற்குப் பிறகளிக்கும் அன்னதானமும் ஸத்ஸம்ஸர்க்கமும் ஒவ்வொரு பாராயணம் நடத்துபவரும் அநுஷ்டித்துவந்தால் வரும் ஸந்ததிகளுக்கு ஓர் சிரத்தையும்ஆசார ஸம்பத்தும் கைகூடும். ஸ்ரீமுத்தாபிராமாநுக்கிரஹத்தால்இத்தர்மகர்த்தரான பிரும்ஸ்ரீ யாகதீக்ஷிதரவர்கள் அக்நிஹோத்ரத்துடன் பல்லாண்டு சுகமாக ஜீவித்திருந்து இதை விடாது நடத்தும்படி வேண்டுகிறேன்.

शिवं प्रजायै शिवमस्तु मह्यम् ॥

ஸ்ரீவத்ஸ வே ஸோமதேவசர்மா.

---

# ஆர்யம் அழிவது என்.

## விவாஹமுறை தவறியதால் என் ?

முதலில் ஸூத்திரங்களில் விவாஹமுறை கூறியவிதம் அறிந்தால் பின் தற்காலக் கலியாண முறையின் புறக்ஷியை நன்ருய்த் தெரிந்து கொள்ளலாம். இதை மூன்று பாகங்களாகப் பிரிப்போம்.

(அ) வதூவர நிச்சயம்- பிருமம்சர்யாச்ரம வாஸம் முடிந்தவுடன் ஒரு பிரும்மசாரி விரதம் முடித்துக்கொண்டு வெளியேறுகிறான். சில பிரும்மசாரிகள் பெற்றோர் வீட்டில் தங்குவார்கள். சிலர் க்ஷேத்ரயாத்ரை தீர்த்த யாத்திரை செய்து கொண்டிருப்பார்கள். 1. முதலில் பெண்வீட்டுப்புரோஹிதரும் பிள்ளை வீட்டுப் புரோஹிதரும் ஸாமுத்ரிகா லக்ஷண முறைப்படி அங்க அமைப்புக்கள்உருவங்கள் வதூவரர்களுக்கு உவமையாக இருக்குமா என்று பார்த்துக் கலந்து கொள்வார்கள். புரோஹிதர்களே இம்முறைப்படி வதுவுக்கு ஒத்த சிலவரங்களையும் வரனுக்கு ஒத்த சில வதூக்களையும் பொறுக்கி உத்தேசித்து வைத்துக்கொள்வார்கள். 2. பிறகு புரோஹிதர்களே (எல்லோரும் ஜோஸியர்களாக இருப்பார்கள்.) வதூவரர்களின் ஜாதகங்களைச் சோதித்து எந்த வதூவரர்களுக்குள் மன ஒற்றுமை குணம் நடத்தை ஆயுள் புத்ரபாவம், முதலிய தாம்பத்ய ஸுகங்கள் ஒத்திருக்கின்றன என்று முக்கியப் பொருத்தங்களைப் பார்த்துப் பொறுக்கி வைத்துக் கொள்வார்கள. 3. முன் முறைப்படி பொறுக்கியவைகளினின்று பின் முறைப்படி சில கழிய பாக்கிகொஞ்சம் இருக்கும் வதூவரர்களை இன்னும் ஒரு முறையில் சோதிப்பதுண்டு. உத்தேசித்து ஒவ்வொரு பெண்ணின் முன்பும் தனித்தனி குணங்களுள்ள இடங்களிலிருந்து மண்ணுருண்டைகள் கொண்டுவந்து வைத்து ஏதாவது ஒரு மண்ணுருண்டையைக் கையால் எடுக்கச் சொல்கிறது. துளஸித்தோட்டத்து மண், ஸ்மாசனத்து மண், குப்பை மண், நஞ்சை நிலத்துமண், உப்புமண், முதலிய மண்ணுருண்டைகள் வைப்பதுண்டு. எந்தப்பெண் நல்ல குணமுள்ள மண்ணுருண்டையை எடுக்கிறதோ அந்தப் பெண்களைப் பொறுக்குவார்கள். உத்தேசிதத ஒவ்வொரு பிள்ளையின் ரேதஸ் (சுக்லத்தை) எடுத்து ஜலத்தில் போடுகிறது. (25-வயதுக்குள்படாத பிள்ளைகளுக்குத் தான் கன்னிகாதானம் செய்கிறது வழக்கம்) எவருடைய சுக்லம் அமிழ்கிறதோ அவர்களைப் பொறுக்கிக் கொள்வார்கள். இவ்விதம் பொறுக்கி எடுக்கப்பட்ட பிள்ளைகளுள் பிடித்தவருக்கு பெண்ணின் பெற்றோர் தங்கள் பெண்ணை தானம் பண்ண நிச்சயம் பண்ணிக்கொள்வார்கள்.

(ஆ) கன்னிகாதானம்—நல்லதினத்தில் குரு முதலியசுபகிர ஹங்கள் நல்லஇடங்களில் இருக்கும்படியான சுபலக்னத்தில் பெற்றோர்கள் தங்கள் பெண்ணை நிச்சிதபிள்ளைக்குத் தானம் செய்கிறார்கள். தானத்துடன் தொடர்ந்த அம்மி மிதித்தல் ஸப்தபதி பொரி ஹோமம் முதலிய கார்யங்கள் முடிந்ததும், தானம் பூர்ணமாகிவிடுகிறது. இப்பொழுது தானங்கொடுத்த பெற்றோர்கள் தங்கள் பெண்ணிடததில் இதுவரையில் தாங்கள் வைத்திருந்த கவலை, பாத்தியம், அன்புமுதலிய ஸர்வஸ்வாதந்திரியத்தையும் தானங் கொண்டவனுக்குத் தக்ஷணமே மாற்றி விடுகிறார்கள்.

(இ) கிரகப்பிரவேசம். விவாஹம் (கன்னிகாதானம்) ஆன அன்றயதினம் இரவு தானம் பெற்ற பையன் தன் பத்னியை அழைத்துக்கொண்டு, அதிகம் குழந்தைகள் உள்ள கிழதம்பதிகள் வீட்டில் படுத்துத் தூங்கிவிட்டு உதயத்துக்கு முந்தி அவ்வூரை விட்டு வேதப்ரச்னங்களைச் சொல்லிக்கொண்டே ஊர்போய் சேருகிறான். (நடுவில் ஜலஓடைகளைப் படகில் தாண்டவேண்டியிருந்தால் அப்பொழுது நாவப்ரச்னம் சொல்வான்) ஊர்போய்ச் சேர்ந்ததும் நல்ல லக்னத்தில் தன் புது மணப்பெண்ணுடன் தன் வீட்டுக்குள் பிரவேசம் செய்கிறான். உடனே கிருகஸ்தாச்ரமத்துக்கு வேண்டிய ஒளபாஸனக்கினி முதல் முதலாக வளர்க்க ஆரம்பிக்கிறான். இதில் செய்கிற ஹோமத்துக்கு பிரவேச ஹோமம் என்று பெயர். அன்று இரவு முதல் 3 அல்லது 12 இரவுகள் அல்லது 1 வருஷகாலம், உப்பு உறைப்பு அற்ற ஆகாரம் சாப்பிட்டுக்கொண்டு தரையில் படுத்துக்கொண்டு நவதம்பதிகள் விரதம் இருப்பார்கள். பின் பிறந்தவீடு செல்வதில்லை. பெண் பெற்றோர் பெண் வீடு செல்வதில்லை. விவாஹம் நடந்தபிறகு ருது ஆரம்பித்து 3வருஷ காலம் சென்றபின் ஷஷ்டி விரதம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விரதமுடிவில் கர்ப்பாதானம் செய்யப்படுகிறது. இந்தக் குறிப்பிலுள்ள விஷயம் ஸூத்திரங்களிலிருந்து ஊஹிக்கப்படுகிறது. ஒரு வருஷம் விரதம் காத்த தம்பதிகள் பெற்றபிள்ளை ரிஷியைப்போலாகும் என்று சொல்கிறார்.

தற்காலம் நடக்கும் விவாஹமுறை எல்லாரும் அறிந்திருந்தாலும் பின்னால் தாரதம்மியம் காட்டவேண்டி இங்கே சுருக்கமாய்க் குறிக்கப்படுகிறது.

1. பெண்ணைப் பெற்றோன் பெண் ருதுவாகக் கூடிய வருஷத்துக்கு முன் வருஷம் தன் பெண் ஜாதகத்தை எடுத்துக்கொண்டு ஊர் ஊராய் வீடு வீடாய் விசாரிதத இடமெல்லாம் போய் ஒரு மூட்டை ஜாதகம் கொண்டு வருகிறான். ஜோஸியர்களிடம் சென்று ஜாதகங்களை உத்தமம், மத்யமம், அதமம் என்று 3 கட்டுகளாகப் பிரித்துக் கோர்க்கிறார்கள். பொருககிய ஜாதகங்களுடன் பிள்ளை பெற்றோனிடம் சென்று எதிர் ஜாமீன் லௌகிக முறையில் தன்னிஷ்டம் பூர்ததியடையாமல் ராப்பகல் தூக்கமற்று பெண்ஜாதி பிள்ளை பெண்களின் வசைச் சொற்களையெல்லாம் மௌனமாகப் பொறுத்துக்கொண்டு ஆனி மாஸத்தில் முன்பாதி போக்கிவிடுகிறான். பிறகு வீதியில் ஓடும் எந்தப் பிள்ளைக்காவது பெண்ணைக் கொடுக்க வேண்டுமென்று நிச்சயிக்கிறான். ஜாதகம் பார்ப்பதில்லை. பிள்ளை யோக்யதை பார்ப்பதில்லை. பொருத்தமில்லாத நாள், நக்ஷத்திர, லக்னத்தில் அபத்த மந்த்ரக் கூட்டத்தினிடையில் மகா கவலையுடன் இந்தப் பிள்ளைக்காவது தாலி கட்டியாய் விடவேண்டுமே விக்னமில்லாமல் என்று நினைத்துக்கொண்டே கன்னியாதானம் செய்கிறான். 4, 5, நாட்களுக்குத் தப்பதிகளுக்கும், பந்துக்களுக்கும், ஊராருக்கும் தொம்பர்களுக்கும், நாயகளுக்கும், வேலைக்காரர்களுக்கும், வயிறு புடைக்க விருந்து, ஆநந்த குதூஹலம் கச்சேரிகள், ஊர்வலங்கள் அபத்த மந்த்ர வேதியர்களுக்கு ஷோடசோபசாரம், வைதிகலௌகிகச் செலவு பிறகு பெண்ணை தன் வீட்டில் வைத்துக்கொண்டு அக்னிச் செட்டியை வெறும் பானையாக்கிப் பிள்ளையைத் தனியாகவே ஊருக்கனுப்பி விடுகிறதும் 3. கிரகப்பிரவேசம் ஸமந்த்ரகம் அமந்த்ரகம் கல்யாண ஸமயத்தில் இறங்கியிருக்கும் ஊரார் வீட்டில் நடக்கிறது, தவறினால் பிள்ளை தன் ஊரில் தன் வீட்டில் கிரகப்பிரவேசம் செய்துவிட்டு மறுதினம் பெண் பிறந்தவீட்டிற்கு அனுப்பிவிடுகிறான். பிறகு பெண்ணுக்குப்பிறந்தவீடுதான் வீடு, ருதுவானபின் கெர்ப்பாதனத்திற்காக ஒருதரம் புருஷன் வீட்டில் பிரவேசம். கர்ப்பாதானம் ஆன 2 மாதத்திற்கெல்லாம் பிறந்த வீட்டிற்கு வாவேண்டியது. பிறகு ஸீமந்தத்துக்கு புரு

ஷன் வீட்டில் பிரவேசம். 3 மறுதினம் பிரஸவிக்க பிறந்தவீடு பிரஸவித்து 6 மாஸம் கழித்து மறுபடி கர்ப்பாதானத்துக்கு புருஷன் வீட்டில் பிரவேசம், 4 கர்ப்பம் தரித்த 2 மாஸம் பிறந்த வீடு. இந்தப் பிரஸவம் ஆனதும் புருஷன் தன் வீட்டுக்காவது வரவேண்டும். அல்லது புருஷன் தனியாக வேருேரிடத்தில் வேலையில் அமர்ந்து தான் பிறந்த குடும்பத்தோருடன் தான் அங்கு சென்று ராணியாயிருக்கவேண்டும். இப்படியிருந்தால் 3-வது கர்ப்பம இவ்விதம் 4-பிரவேசம் தவிர 5-ம் பிரவேசம் கொண்டவன் வீட்டில் யாராவது இறந்தால்தான். இதுதான் தற்கால கன்னிகான மஹிமை.

ஸாசம் ரங்காசாரியார்.

## பண்டுருட்டியில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் பிருந்தாவனம் ஆராதனை மஹோத்ஸவம்.

विख्याते वसुधातले बुधनुते मन्त्रालये सिद्धिमान्
श्रीतुंगातटगे शुभे विलसिते बृन्दावने संवसन् ।
पूजां प्राप्य जनैस्सदा बहुविधां कुर्वंस्तदिष्टं प्रभुः
तुष्टो मे गुरुराघवेन्द्रयतिराट् दद्यादलं मंगलम् ॥

பக்த ஜனங்களுடைய ஸகல கஷ்டங்களையும் நிவர்த்தி செய்து ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கும் சக்தி பெற்றவரும் துங்கபத்திரா தீரத்திலுள்ள மந்த்ராலய க்ஷேத்திரத்தில் பிருந்தாவன ரூபமாய் பிரகாசிப்பவருமான ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளுக்கு பக்த மஹாஜனங்களால் பண்டுருட்டி அக்கிரஹாரத்தில் நாளது ஆவணிமீ 9உ துதியை புதன்கிழமை முதல் மூன்று தினங்கள் பஜனை; ஊர்வலமும் பிராமணசந்தர்ப்பணை முதலானவைகளுடன் உத்ஸவம் நடை பெறுகிறபடியால் அனைவரும் விஜயம் செய்து உத்ஸவத்தையும் சிறப்பாய் நடப்பித்து வைத்து ஷ ஸ்வாமிகளுடைய கிருபைக்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பண்டுருட்டி }
9-8-26 }

தங்கள்,
மஹாபக்த ஜனங்கள்.

மஹிமை.

நர்மதாதீரவாசியாகிய பலபத்திரன் என்னும் ஓர் அந்தணன் 'வஜ்ரேச்வரி' என்னும் தனது பத்னியை வெறுத்துத் திரஸ்கரித்துப் பரதாரவிருப்பங்கொண்டு அவர்கள்பால் தன்னிஷ்டப்படித் திரவியங்களை விரயப்படுத்திச் சுகித்துக் கொண்டிருந்தனன். விருத்ததசை வந்தகாலத்தில் சரீரத்தில் கருங்குஷ்டமும், ஆண்குறியிலும் பீஜத்திலும் இரணமும், உண்டாகி நாட்செல்லச் செல்ல ஆண்குறி க்ஷீணப்பட்டு இரணம் மேலிட்டு மிகவும் வருத்தமுறச் செய்ய, அவனைக் கண்ணுற்ற பெரியோர்கள் அனேக ஔஷதப் பிரயோகங்கள் செய்தும் நிவிர்த்திக்க முடியாமற்போயிற்று, அப் பெரியோர்கள் 'இது பாபத்தால்வந்த இரணமாதலால் ஔஷதங்களாற்போகாது. பாபபரிகாரத்தாற்போக்குவதே முறைமையாம்' என்றெண்ணிப் பொன்னாற் பசுவொன்று செய்து அதன் கர்ப்பத்தில் அவனை வசித்துவரச்செய்து அப்பொற் பசுவைப் பிராமணர்களுக்குத் தானம் செய்தனர். செய்தும் வியாதி நீங்குதலைக் காணுமல் வருந்திக்கொண்டிருக்கும் சமயத்தில் காஞ்சிகாமகோடி பீடத்தின் பிரதக்ஷண மஹிமையைச் சில முதியோராற்கேட்டு அக்கணமே தனது மனைவியுடன் காஞ்சிப் பதியையடைந்து ஒரு மாதம் வரையில் நாடோறும் தவறுமல் பிலத்தை நூற்றெட்டுப் பிரதக்ஷணம் செய்து வந்தனன். நாளுக்கு நாள் பிணி நீங்கப் பெற்றுச் சரீரகாந்தியையும் புத்திர பௌத்திராதி சம்பத்துக்களையும் அடைந்து புண்ணிய சீலனாய் வாழ்ந்திருந்து பின் தேவியினால் அனுப்பப்பட்ட விமானத்திலேறி அம்பிகையின் சரணாரவிந்தத்தில் கலந்தனன்.

பதினொன்றும் அத்தியாயம் பிலாகாசப்பிரபாவம் முற்றிற்று.

---

உ

ஸ்ரீ திரிபுர சுந்தர்யை நம:

## பன்னிரண்டாம் அத்யாயம்.

### மஹா த்ரிபுர சுந்தரி வர்ணனை.

(விஷய சூசனை)

[காமகோடி பீடத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ திரிபுர சுந்தரியினுடைய வர்ணனையையும், தேவர்களுடைய துன்ப நிவிர்த்தியின் பொருட்டுப்

பிலத்தினின்றும் தேவி வெளிப்பட்டு வந்து உலகினைப் பஸ்மீகரப்படுத்தித்திரிமூர்த்திகளை யுண்டாக்கிப் பின் மறைந்து போனமையையும். பின்னர் அத்தேவி பந்தகாசுரப் பிரேதத்தோடு வெளிவந்தமையையும், வெளிவந்து தேவர்களுக்கு அப்பந்தகனைப் புதைத்துத் தனக்காலய முண்டாக்கித் தன்னைப் பிரதிஷ்டை செய்து தரிசிக்கும் விதத்தைச் சொன்னமையையும் அவர்கள் தன்னைத் தரிசித்த பின்னர் அவர்களுக்குத் தன் வரலாறெல்லாம் தெரிவிக்கின்றமையையும், தேவி சொன்னதுபோல் அத்தேவர்கள் பூஜித்தமையையும் நான்கு யுகங்களில் பராசக்தியைப் பூஜித்தார் இவரிவ ரென்பதையும் விளக்குவது.]

காம கோட்டமென்கிற விடத்தில் காயத்ரீ மண்டபத்தில் பிராகாசமாகிய பீடத்தில் காயத்திரியாகிய ஓங்கார கோணத்தில் பராசக்தி ஸ்வரூபிணியாகிய காமாக்ஷிதேவி எல்லாவுலகங்களையும் படைப்பதற்குக் காரணமாயுள்ள சகல வடிவங்கொண்டு பத்மாஸனியாய், சதுர்ப்புஜையாய், முக்கண்ணுடையளாய், மூல சக்தி, ஆதி சக்தி, ஆதிலக்ஷ்மி, ஆத்மசக்தி, பிரும்மவித்தை, என்கிற நாமங்களால் துதிக்கப் பட்டவளாய், தாமரை மலர்போன்று காந்தியுடையவளாய், சந்திர சூடாமணியாகிய கிரீடம் தரித்துப் பாசம், அங்குசம், கோதண்டம் (கரும்புவில்) பஞ்சபாணம் என்கிற இவைகளைத் தரித்திருக்கின்ற திருக்கரங்களை யுடையவளாய், இரு செவியிலும் சூரியசந்திரர்கள் காதோலையாய் ஒளிவீச, சிவந்த பட்டாடை புனைந்து திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப் பட்டு, ஸகல ஸௌபாக்கியங்களையும் தரவல்ல மாங்கல்யம் கண்டத்தில் விளங்கத் தாமரை முதலிய மலர்மாலைகள் அசைந்தாட ராஜராஜேச்வரியாய், ஸ்ரீவித்யாபரமேச்வரியாய், திரு மூர்த்திகளால் ஆராதிக்கப்பட்டவளாய் காமேசரால் விரும்பப்பட்ட தேவியாய் சிவசங்கரருக்கு ஆத்மஸ்வரூபிணியாய், அச்சங்கரரால் விரும்பப்பட்டவளாய்ச் சகல கலாரூபிணியாய்ச் சர்வதந்திர ஸ்வரூபிணியாய் சகலப் பிரபஞ்சரூபிணியாய், சர்வப்பிராணி ஸ்வரூபிணியாய் சக்கர ரூபிணியாய், ஸ்ரீகாஞ்சி நகரத்திற்கு ஈசையாய், அவ்விடத்தில் சரண்புகுவோர்க்கு சகலாபீஷ்டங்களையும் தரும் பிரதானியாய், இலக்ஷ்மி, ஸரஸ்வதி, என்னும் இருவரும் இடம்வலம் என்னும் இரண்டு பக்கங்களினின்று வீசப்பட்ட சாமரங்களை யுடையவளாய், சதாசிவாதி மூர்த்திகளுக்கும். கௌரியாதி சக்திகளுக்கும் காரணியாய், காமகோடி என்றும், திவ்ய

மங்களரூபிணியாகிய காமாக்ஷி என்றும், சூதலிங்ககாரணி என்றும் சூதபீஜ அர்த்தரூபிணி என்றும் சிவனுருக்கதிகை என்றும், சிவாங்கத்திலிருப்பவளென்றும், சிவமூர்த்தி என்றும், சிவத்தைக் கொடுப்பவளென்றும், மஹாகாமேசுவரருக்கு மஹிஷி என்றும் மஹா த்ரிபுரசுந்தரி என்றும் சொல்லப்படும் திருநாமங்களால் பிரசித்தி பெற்று ஸ்ரீ சங்கரநாயகியாய் வீற்றிருக்கின்றனள்.

அங்ஙனம் வீற்றிருக்கின்ற தேவியை சிவாக்ஞையால் கிளிரூபமாய் ஜண்பக விருக்ஷத்தில் வசிக்கின்ற தேவர்கள் ஹிருதய கமலத்தில் தியானம் செய்து, பந்தகாசுரனை நாசப்படுத்தவேண்டித் தவம்புரிந்து வந்தனர். அம்பிகை அவர்களது தவத்துக்கு இரங்கித் தயையுடையவளாய்ப் பிரளயகாலாக்கினி ஸ்வரூபிணியாய் மிக்க கோபத்தோடும் பிலத்தினின்றும் வெளிப்பட்டு எல்லாவுலகங்களையும் பஸ்மீகரப்படுத்தி, பஸ்மீகரப்படுத்திய அவ்வெளியில் நிர்க்குணையாகிய தேவியானவள் சகுணமாகியதிருவுருவங்கொண்டு காயத்திரி மண்டப மத்தியில் தானொருத்தியாகவேயிருந்து தனது வாமநேத்திரத்தில் விஷ்ணுவையும் தக்ஷிண நேத்திரத்தில் பிரமனையும், பாலநேத்திரத்தில் உருத்திர மூர்த்தியையும் சிசுரூபமாக உண்டாக்கிப் பிரமனுக்குச் சிருஷ்டி வித்யாத்மகமாகிய பாலையும், விஷ்ணுவுக்கு ஸ்திதி வித்யாத்மகமாகிய பாலையும். உருத்திர மூர்த்திக்கு லயவித்யாத்மகமாகிய பாலையும், ஊட்டி மறைந்தனள்.

திரிமூர்த்திகளும் பாலுண்டவளவில் யௌவன ரூபமடைந்து உலகம் சூன்யமாயிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்து சொப்பனத்திற்காணும் பொருள் மறைதல் போல் போயிற்றே என்று ஒருவருக்கொருவர் பேசிப் பயமடைந்தவர்களாய்ப் பின்னர் ஆலோசித்துத் தாம் செய்யத்தகுந்த தொழில்களை எண்ணிப் பிரமன் முன்னிருந்த வண்ணம் ஸ்தாவர ஜங்கமமாகிய உலகத்தைப் படைக்கவும், விஷ்ணுருத்திரர்கள் காத்தல் அழித்தலாகிய தொழில்களைச் செய்யவும் ஆரம்பித்தகாலத்தில் பந்தகாசுரனோடு உலகம் விருத்தியடைந்தது.

ஜண்பக விருக்ஷத்தில் கிளிரூபமாயிருந்த தேவர்கள் ஒரு ஜாமத்துக்குள் தேவி திரிபுர மூர்த்திகளைப் படைத்து உலகத்தை

சிருஷ்டிப்பித்த அதிசயத்தை ஒருவர்க்கொருவர் பேசி இன்னும் என்ன அதிசயம் விளையுமோ வென்றெதிர் பார்த்திருந்தனர். அவர்கள் அங்ஙனமிருக்க, திரிபுரசுந்தரியாகிய அம்பிகை திரிமூர்த்திகளைப் படைத்த பின்னுளாகிய மறு நாளிரவில் ஸ்ரீ கைலாஸத்தில் பந்தகாசுரன் நித்திரை செய்வதைப்பார்த்துக் கோபம் கொண்டவளாய் ஒரு பாதத்தை அவனது கண்டத்திலும் மற்றொருபாதத்தை அவன் மார்பிலும் வைத்து பதினெட்டாயுதங்களோடுகூடிய பதினெண்புஜங்களையுடைய பைரவரூபிணியாய் அவனது சிகையைப் பலமாய்ப்பிடித்துக் கொண்டு சக்கராதி ஆயுதங்களால் அவனது புத்திர, பௌத்திர, பந்து, மித்திர பரிவாரங்கள் இருக்கும் இடங்களில் க்ஷணத்துக்குள் சென்று அவரவர்களை அந்தந்த க்ஷணமே கொன்று சூரியோதயகாலத்தில் ஐந்து வயதுடைய கன்னிகையாய்க் காமகோடி பீடமாகிய பிலத்துவாரத்தை வந்தடைந்தனள்.

அப்போது அங்கிருந்த தேவர்கள் கன்னிகை உருவமாகி வந்த அம்பிகையினது திருக்கரத்தில் பர்வதாகிருதியாயிருக்கின்ற பந்தகாசுரனுடைய சிகை சிக்குண்டிருக்கும் கோரத்தைக் கண்டு பயந்து பின் மாணமடைந்தானெனத் தேளிந்து, சகல லக்ஷணத்தோடும் கூடிய அதிசுந்தரமாகிய திருமேனியுடையவளாயும் சர்வாபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவளாயும் நெருப்பிலிட்ட பொன் போல் ஒளிவிடும் திவ்யமாகிய பீதாம்பரம் தரித்தவளாய்க்காணப்படும் கன்னிகையைக்கண்டு துந்துபி, சங்கம், பேரிகை, படகம், காகளம், புள்ளாங்குழல், தாளம், வீணை, மத்தளம் முதலிய பல தேவவாத்தியங்களை முழக்கித் தாமரை, மல்லிகை, முல்லை பாரிஜாதம், ஜண்பகம் முதலிய திவ்யமலர்களையும் கஸ்தூரி முதலிய சுகந்தங்கள் கலந்த சந்தனக்குழம்பையும் மழை போல் வாரியிறைத்து, "உனக்கு ஜயமுண்டாகுக, மங்களமுண்டாகுக," என்று போற்றிப் பிரதக்ஷண நமஸ்காரங்கள் பல செய்து "ஹே, கல்யாணி, ஹே, தேவி, நீ யார்? எங்கிருந்து வருகின்றாய்? இந்தப் பந்தகனனவன் உன்னால் என் கொல்லப்பட்டான்? எவ்விதமாகக் கொல்லப்பட்டான்? இவன் இறந்தது மிக ஆச்சரியம்! பிரமனாதியாகச் சொல்லப்பட்ட நாங்கள் அனைவரும் இவனால்